
ஆகஸ்ட் மாதச் சிந்தனைகள்



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## 2022



PUBLISHED BY
COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA

தெலசால் அருட்சகோதரர்கள்
இந்திய மறைப்பணித்தளம்

## சிந்தனை தொகுப்பாளர் உரை

இறைவனால் உருவாக்கப்பட்ட அனைவரும் இறையாட்சியில் பங்குபெற தகுதியானவர்களே! இறையாட்சி என்பது அன்பு, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற வாழ்வியல் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் இறைச்சமூகம்.

இறைவனின் இறைச் சமூகத்தில் பங்குபெற தகுதியானவர்களாக அழைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் இறை மதிப்பீடுகளை பிரதிபலிக்கும் விண்மீன்களாக சுடர்விட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு அன்றாட விவிலிய வாசகங்களை மையப்படுத்தியும் இம்மாத லசாலியச் சிந்தனைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அருட்சகோ. **கென்னடி** FSC



லசாலிய அழைப்பு என்பது வகுப்பறையே ஆலயமாக, மேஜையே பலிப்பீடமாக ஆசிரியரே பலிப்பொருளாகக் கொண்டு இளைஞர்களுக்கு அறிவையும், ஞானத்தையும் அளிக்கும் **ஒரு தியாக வாழ்வு**

# லசாலிய இறையழைத்தல்

## கல்விப் பணிக்கு இறைவன் அழைக்கிறார்

## வந்து பாருங்கள்

(யோவான் 1: 39)

தொடர்புக்கு
இறையழைத்தல் இயக்குநர்,
தெலசால் சபை அருட்சகோதரர்கள்,
புனித மிக்கேல் அருள் தென்றல்,
தேனி சாலை, நாகமலை,
மதுரை – 625 019,
தொலைபேசி : 9363518327





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எரேமியா 28:1-17

பதிலுரைப்பாடல்
திபா. 119:29,43,79,80,95,102

நற்செய்தி
மத்தேயு 14:13-21

புனித அல்போன்ஸ் லிகோரி

ஆகஸ்ட் 2022

**01**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

## சிந்தனைத் துளிகள்

மனித வாழ்வின் பல்வேறு வேளைகளில் அர்த்தமுள்ள செயல்பாட்டின் வழியாக வாழ்வளிக்கும் படிப்பினைகளை எவ்வாறு பிரதிபலிக்க வேண்டும் என்பதே இன்றைய நற்செய்தியில் இயேசுவின் வள்ளன்மை மிக்க செயலின் நோக்கமாக அமைகிறது. நம் வாழ்வை எவ்வாறு பிறருக்காக பரிசளிக்க வேண்டும் என்பதே இன்றைய நற்செய்தி நமக்கு எடுத்து இயம்புகின்றது. "என்னைத் தேடி வந்த யாரையும் நான் திக்கற்ற நிலைக்கு ஒருபோதும் தள்ளிவிடேன்" என்ற வாக்குரையின் வெளிப்பாடே இயேசுவின் ஈகை குண எடுத்தியம்பல். தன்னைத் தேடி வந்த யாவரும் நலம் பல பெற்றுச் செல்ல வேண்டும் என்று எண்ணிய இயேசு அனைவரிடமும் மிகுந்த பரிவிரக்கம் காட்டி நல்ல ஆயனின் நற்குணங்களை பிரதிபலிக்கிறார். அண்ணல் தெலசாலும ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஏழை எளியோருக்கு வாரி வழங்கி வள்ளன்மை பண்பினை வாழ்ந்து காட்டினார். இறைவனின் ஈகைக்குணத்தோடு நாமும் நலம்பல பெற்று நற்செயல்களின் தார்மீகர்களாக உருவாவோம்.

**சிந்தனைக்கு :**

கொடுக்கும் கரங்கள் எப்போதும் உயர்ந்த நிலையில் இருந்து கொடுக்கும். வாங்கும் கரங்களோ எப்போது தாழ்ந்த நிலையில் தாழ்வான நிலையில் பெறும். நாம் கொடுக்கும் கரங்களை உடையவர்களாக உருமாறுவோம். உதவி என்று வந்தவருக்கு உள்ளம் நல்கி உவகையோடு உபசரிப்போம். நம்பிக்கையின் ஒளிக் கீற்றுகளை நம்பிக்கையற்றோரின் வாழ்வில் நாளும் விதைப்போம். அன்பு, நீதி, சமத்துவம் என்ற வாழவியல் மதிப்பீடுகள் வையகத்தில் மலர வைப்போம்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, கடவுளின் பிரசன்னத்தை உணர்தலே, உங்கள் செயல்களில் உதவியையும் ஊக்கத்தையும் தரும் (கடிதம் 2)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS-INDIA ★

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

பயம் என்பது மனித வாழ்வில் தவிர்க்கமுடியா பலவீனம். இயேசு கடல் நீரில் நடப்பதைக் கண்ட சீடர்கள் ஒருசேர பயத்தில் துணிவற்றுப்போய் தீய ஆவி என்று அஞ்சினர். ஆனால் இயேசுவைப்போல் பயணிக்க முற்பட்ட பேதுரு துணிச்சலால் நம்பிக்கையோடு நீரில் நடந்தார். ஆனால் மனித பலவீனத்தால் பாதியில் வீழ்ந்தார். சோர்ந்த பேதுருவிற்கு துணிச்சல் என்ற ஊட்டச்சத்து தேவைப்பட்டது. இயேசு பேதுருவிற்கு உணர்வளித்து உயிரூட்டினார். கலங்கிய பேதுரு கரைசேர நம்பிக்கை என்ற நாற்றங்கால் விதைக்கப்பட்டது. கொரனா நோய்தொற்று காலத்தில் நோயால் மரணித்தவர்களைவிட பயத்தால் இறந்தவர்கள் பலர். இவற்றிற்கு நடுவில் நம்பிக்கையின் நாற்றங்காலை நேர்மறையான எண்ணங்களால் இயேசுவைப்போல் விதைத்த மருத்துவர்களும் செவிலியர்களும் ஏராளம் உண்டு. இன்றைய நற்செய்தி வாசகம் நம்பிக்கையின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது. அனைத்தையும் ஆண்டவனின் சித்தம் என்று ஏற்றுக்கொண்ட புனித தெலசாலின் வாக்குகள் இறைவன்பால் அவர் கொண்டிருந்த நம்பிக்கையின் வெளிப்படையாய் அமைகிறது. தான் இன்னலுற்ற வேளையில் அனைத்தையும் ஆண்டவன் சித்தம் என்று மனதார ஏற்றுக்கொண்டு அவர் வாழ்ந்தார். அதன் விளைவாலே இன்று பாரெங்கும் லசாலிய கல்விப் பயணம் சாத்தியமாகிறது. நம்பிக்கை நம் வாழ்வில் அசைக்க இயலா சக்தியாக மாறவேண்டும்.

**சிந்தனைக்கு :**

மனித வாழ்வில் சாதனையாளரின் பயணத்தில் பயத்தின் பங்களிப்பு ஒருபோதும் உணரப்படுவதில்லை. "நீங்கள் என் மக்களாய் இருப்பீர்கள் நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்" என்ற உயிரளிக்கும் வார்த்தைகள் உலாவரட்டும். நான் என் வாழ்வில் நேர்மறை எண்ணங்களோடு வலம் வருகின்றேனா? என் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் பிறருக்கும் வாழ்வளிக்கின்றதா? வழிகாட்டுகின்றதா?

முதல் வாசகம்
எரே 30:1-2,12-15,18-22

பதிலுரைப்பாடல்
திபா. 102:15-17,18-20,21,22,28

நற்செய்தி
மத்தேயு 15:1-2,10-14

புனித யுசேபியுஸ்

ஆகஸ்ட் 2022

**02**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, நீங்கள் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற கொண்டுள்ள தீவிரமான ஆர்வத்தை கண்டு பேருவகை அடைகிறேன். (கடிதம் 5)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எரேமியா 31:1-7

பதிலுரைப்பாடல்
எரே 31:10-13

நற்செய்தி
மத்தேயு 15:21-28

புனித வால்தோஃப்

ஆகஸ்ட் 2022

**03**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### வாழ்வின் தேடல்:

தன் மகளின் நலன் வேண்டி இயேசுவைத் தேடி வந்த தாயின் தேடல் பற்றி இன்றைய நற்செய்தி வாசகம் அமைகிறது. சபிக்கப்பட்டவர்கள், பாவிகள் என்று இஸ்ரயேல் மக்களால் முத்திரை குத்தப்பட்டு, ஒதுக்கி வைக்கப்பட்ட "கானான்" இனத்தைச் சேர்ந்த ஒரு தாய், தீய அவி பிடித்த தன் மகளைக் குணமாக்கும்படி இயேசுவைத் தேடிவந்தார். அப்பெண், "தம் மகளிடமிருந்து பேயை ஓட்டிவிடுமாறு இயேசுவை வேண்டினார்".

தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசி இருக்கும். வாழ்வின் தேடல் என்பது மனித வாழ்வில் மரணிக்கும் வரை தொடர்கிறது. இந் நற்செய்தி நிகழ்வானது தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சி இவற்றின் வெளிப்பாடகவே கானானியப் பெண்ணின் தேடல் அமைகிறது. இறுதியாக இயேசுவின் கடைக்கண் பார்வை அவள்மீது படுகிறது. இது புறந்தள்ளப்பட்ட அப்பெண்ணின் விடாமுயற்சிக்கு கிடைத்த வெற்றியாகவே அமைகிறது. நாமும் பல வேளைகளில் நமது பிரார்த்தனைகள் கேட்கப்படாதபோது மனம் தளர்ந்து மௌனித்திருக்கிறோம். மாறாக, இக்கானானியப் பெண்ணின் விடாமுயற்சி மற்றும் தன்னம்பிக்கை நமக்கு உத்வேகத்தை கொடுத்து, உயிரூட்டம் கொடுக்க வேண்டும். இறை அன்பில் நாம் ஒன்றாக கலக்கும் வரை நமது தேடலை தொடரவேண்டும்.

### சிந்தனைக்கு:

"அம்மா உன் நம்பிக்கை பெரிது, நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்" என்ற இயேசுவின் நம்பிக்கை மிகுந்த வார்த்தைகள் நம் வாழ்விலும் வாழ்வாகட்டும். நமது நம்பிக்கைப் பாடங்களிலிருந்து நமது நம்பிக்கையை பெரிதாக்குவோம். அயலானின் ஆன்மீக விளக்காய் அவனியில் மலர்வோம்.

### தெலசாலின் பொன்மொழி

என் கடவுளே, நீரே என் ஆன்மாவின் புதையல் என நான் நம்புகிறேன்.. என்னை உமது உறைவிடமாக மாற்றி எம்முடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டுகிறேன். என்னை உமது ஆசிராலும் அருளாலும் நிரப்பும்
(Method of Interior Prayer)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எரேமியா 31:31-34

பதிலுரைப்பாடல்
திபா: 51:10-11,12-13,16-17

நற்செய்தி
மத்தேயு 16:13-23

புனித ஜான் மரிய வியான்னி அருள்பணியாளர்

ஆகஸ்ட் 2022
**04**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### நீங்களே என் சாட்சிகள்:


மனித வாழ்வின் பல்வேறு தருணங்களில் இறைவனின் பேராற்றல் ஆழமாக உணரப்படுவதில்லை. இறைவிசுவாசத்தோடு நாம் இறைவனைத் தேடும்போது அவர் துணை நின்று வழிநடத்துவார் என்ற மனநிலை அன்றாடம் உணரப்படவேண்டும். கடவுள் நம்பிக்கை என்பது விசுவாசம் மட்டுமல்ல அது வாழ்வியல் முறை. இறை உணர்வு ஒவ்வொருவருக்கும் அவரவர் நம்பிக்கையின் அடிப்படையில் வேறுபட்ட அளவில் உணரப்படும் ஒன்றாக அமைகிறது. "நீங்கள், நான் யார் என்கிறீர்கள்" என்ற இயேசுவின் கேள்விக்கு எவ்வித தயக்கமின்றி பேதுரு விடை பகர்ந்தார். பேதுரு. "நீரே மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று இறை அன்புக்கு சாட்சியாய் அவர் விடை பகிர்ந்தார். அகம் என்ற அழகுக்கு ஆதியாகிய ஆண்டவனே முதன்மை என்ற உண்மையை பேதுரு உணர்ந்ததால் இயேசுவே நீரே முதன்மையும், முழுமையும் என்று அன்பு சாட்சி பகிர்கின்றார். வாழ்வின் பல்வேறு தருணங்களில் இறை அன்புக்கு சாட்சியாய் நாம் மாறவேண்டும் என்பதே இன்றைய இறை செய்தியின் அறைகூவல்.

### சிந்தனைக்கு:

இறைவனை நாம் நேசிப்பவர்களாக நாம் மாறும்போதும் இறை அன்பின் சாட்சிகளாய் நாம் நாளும் நந்து கொள்ளும் போதும் பல்வேறு சவால்கள் காத்திருக்கின்றன. ஸ்டேன்ஸ் சாமிகள் போன்று நாம் உண்மைக்கு சாட்சிகளாய் வாழும்போதும், உரிமைக்காய் குரல் கொடுக்க முற்படும்போதும், குரலற்றவர்களின் குரல்களாய் நாம் வாழ முயலும்போதும் பல்வேறு சவால்களை இறைவன் பரிசளிப்பார். அத்தகைய சவால்களே சாதனைகளாக மாற்ற முற்படுவோமா?

### தெலசாலின் பொன்மொழி

எதிரிகளை அன்பு செய்யுங்கள் என்ற இயேசுவின் கட்டளையை இளையோர் பின்பற்ற அவர்களுக்கு உதவுங்கள். பலிக்கு பலிவாங்கும் குணத்தை நீக்க அவர்களுக்கு உதவி செய்யுங்கள். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
நாகூம் 1:15,2:2:3:1-3,6-7

பதிலுரைப்பாடல்
இச 32:35-36,39,41

நற்செய்தி
மத்தேயு 16:24-28

புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு

ஆகஸ்ட் 2022

**05**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### மானுடத்தின் மற்றொரு நம்பிக்கை நட்பு

நட்பின் நாள் இன்று. உலக நட்பின் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. "நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாதொன்றும் இல்லை" என்கிறார் இயேசு. நட்பு ஒருபோதும் குற்றம் கண்டு குறை கூறுவதையும் கடிந்து கொண்டு கண்டனம் செய்வதையும் விரும்பி ஏற்பதில்லை. "குற்றம் பார்க்கின் சுற்றமில்லை" என்ற ஔவையின் வாக்கு வாழ்வியல் உண்மையே. ஆராயாமல் நட்புக் கொள்வது போல கேடு விளைவிப்பது வேறில்லை. ஒருவர் எப்படிப்பட்டவர் என்பதை அறிய பல வழிகள் உண்டு. அவற்றுள் ஒன்று நட்பு. ஒருவருடைய நண்பர் யாரென்று தெரிந்தால் அவர் எத்தகையவர் என்பதைக் கூற முடியும். ஆகையால் மானிட வாழ்வில் நட்பு ஒரு கொடை. இத்தகைய நண்பர்களைப் பெற்றவர்கள் செல்வந்தர்கள் என்று கூறினால் அது மிகையாகாது. நட்பு என்பது நம் இன்பத்தை பெருக்கி துன்பத்தைக் குறைகிறது. சான்றோர் நட்பு வளர்பிறைபோல் நாளும் வளரும். மாறாக, அற்பர்களின் தொடர்பு தேய்பிறைபோல் தினமும் தானே தேய்ந்து மறையும். ஆக நூல்களின் அடிப்படையிலும், உலக கீழானவர்களாக கருதப்படுர். ஆகம அறநூல்களின் அடிப்படையிலும், அற்பர்கள் உலக நடைமுறைகளிலும் மேலாக கருதப்படும் நட்பை பேணமுற்படுவோம்.

**சிந்தனைக்கு :**

ஞானமுள்ளவர்களோடு உறவாடுகிறவர் ஞானமுள்ளவராக மாறி பிரதிபலிப்பர். நல்ல நண்பர்கள் நலம் பயக்கும் நற்சுனை போன்றவர்கள். தன்னைத் தேடி வந்தோரை தாகம் தீர்த்து தரணி புகழ் பாடுவது போல் நாமும் நலம் பல கொடுக்கும் நற்கனி மரமாய் நாளும் உயர முயன்று வாழ்வோம்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் இந்தநிலையை விட்டு விலகினால்தான் நீங்கள் ஆறுதல் அடைவீர்கள் என்றால் நீங்கள் இறைவனிடமிருந்து வரும் ஆறுதலை நாடவில்லை, உங்கள் சுய அறுதலை நாடுகிறீர்கள் (கடிதம் 83)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
தானி 7:9-10, 13-14

பதிலுரைப்பாடல்
திபா. 97:1-2,5-6,9

நற்செய்தி
2 பேதுரு 1:16-19

ஆண்டவருடைய தோற்ற மாற்றம்

ஆகஸ்ட் 2022

**06**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**உருமாற்றமா? உளமாற்றமா?**

மனித சமூகத்தில் அன்பும், கருணையும், அறமும், ஒழுக்கமும் தழைத்தோங்க மாற்றம் என்ற நிகழ்வு நடந்தாக வேண்டும். எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்ற நேரிய நெறிமுறை நம் வாழ்வில் மலர, மாற்றம் என்பது அவசியமானதே. இயேசு மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உருமாறிய ஒப்பற்ற நிகழ்வு பற்றி இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு எடுத்துரைக்கிறது. உருமாற்றம் என்பது வெளித்தோற்றத்தில் ஏற்படும். மாறாக மனமாற்றம் என்பது புத்தன் போதித்த போதி மர நிகழ்வு, அது அகத்தின் அடுத்த நிலை, தன்நிலையிலிருந்து, நன்னிலைக்கு மாற முற்படும் முதல் நிலையும், முதன்மை நிலையும் கூட. இயேசுவின் மாட்சியை உருமாறிய நிகழ்வு நமக்கு எடுத்தியம்புவது போல் மனிதன் ஒவ்வொரு நாளும் மாற்றங்களை ஏற்பவனாக, மாற்றங்களை விதைப்பவனாக மாறும் பொழுது தான் அங்கு புத்தாக்க சிந்தனைகள் புதிய பரிணாமம் எடுக்கும். நம் கல்வியல் சூழலில் நவீன காலத்திற்கேற்ப நம் கல்வி முறைகளையும், சிந்தனைகளையும் மாற்றி மேம்படுத்துவதும் மேலும் காலத்திற்கேற்றவகையில் கல்வி முறையில் ஆக்க நிலையில் பயணிப்பதும் லசாலியச் கல்வியியல் சிந்தனையே.

**சிந்தனைக்கு :**

மெய்ஞான வெளி நோக்கிய பயணம் என்பது அறிவியல் சிந்தனைகளுக்கு அப்பால் நின்று மனித மனங்களை ஞானத்தின் பால் ஈர்த்து ஆள்வதும், மனித விழுமியங்களையும், வாழ்வியல் பெறு நெறிகளையும் பேணி பாதுகாப்பதே ஆகும். மனிதனும் தெய்வமாகலாம் மாற்றங்களும் மனித மனங்களில் ஏற்றம் பெறலாம்.

### தெலசாலின் பொன்மொழி

இயேசுவின் உருமாற்றம் அவரில் குடிகொண்டிருந்த இறைமகிமையை வெளிப்படுத்தியது. ஆனால் நம்மிடம் மகிமை இல்லை. நம்முடைய மனமாற்றம் என்பது தூயஆவியின் அருளால், தம்மில் அவர் குடிகொள்ள வேண்டும்(MSF)



COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
சால.ஞா 18:6-9

இரண்டாம் வாசகம்
எபி 11:1-2, 8-9

நற்செய்தி
லூக் 12:32-48

பொதுக்காலம் 19-ம் ஞாயிறு

ஆகஸ்ட் 2022

**07**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

## சிந்தனைத் துளிகள்

**உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?**

உழைப்பால் உலகு செழிக்கும். நானிலம் செழிக்கும், நல்வினைகள் மேலோங்கும். இத்தகைய சிறப்பு மிக்க உழைப்பால் தான் இப்பூவுலகு புதிய கீதம் இசைக்கிறது. ஒரு மனிதனை பல்வேறு படிநிலைகளில் உயர்த்துவதும், உருவாக்குவதும் உழைப்பு மட்டுமே. உழைப்பே ஒரு மனிதனை வளம் பெற்றவனாகவும், பலம் பெற்றவனாகவும் மாற்றி விடுகிறது. மனமும், குணமும் உறதிபட உழைப்பு உறுதுணைபுரிகிறது. சோர்வு இல்லாமல் ஒன்றைச் செய்ய இடைவிடாது முயல்பவர், தன் செயலுக்கு இடையூறாக வரும் துன்பங்களை இன்பங்களாக மாற்றுவார் என்கிறார் வள்ளுவர். மனிதர்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் உழைக்கப் பிறந்தவர்களே! அன்பு என்பது அகத்தை சீராக்குவது போல, உழைப்பு உடலை சீராக்கி உத்வேகம் கொடுக்கும். உயிருள்ளவரையில் உழைத்துச் சாக விரும்புகிறேன். உழைக்க உழைக்கத்தான் எனக்கு உயிர் வாழ விருப்பம் அதிகரிக்கிறது என்ற பெர்னாட்சாவின் வரிகளை வாழ்வாக்குவோம்.

**சிந்தனைக்கு :**

வெற்றி என்பது மனதைரியமும், மங்காத செயலாற்றலும் பெற்றவர்களுக்கே கைகூடுகிறது. மாறாக செயலுக்கு முன்னதாகவே அதன் விளைவுகள் பற்றி கலங்கி பின்வாங்கும் சோம்பல் உடையவர்களுக்கு அல்ல. தான் மேற்கொண்ட கடமையை முடித்துக் காட்ட முற்படும் மேலோர் அக்கடமை முடியும் வரை உடல் வலி, பசி, தூக்கம், பிறரால் ஏற்படும் இன்னல் இவற்றை பொருட்படுத்தாமல் உழைத்து வெற்றியடைவர். உழைப்பை நேசிப்பவர்களாக உருமாறுவோம். உழைப்பே உயர்வு தரும்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் துன்பநிலையிலிருந்து விடுபட்டதை எண்ணி நான் மகிழ்கிறேன். கடவுள் உங்களில் ஏற்படுத்திய மாற்றத்தை நீங்கள் உணர்ந்து கொண்டீர்கள் (கடிதம் 46)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபே 1:2-5,24-28

பதிலுரைப்பாடல்
திபா: 148:1-2,11-12,13-14

நற்செய்தி
மத்தேயு 17:22-27

புனித தோமினிக்

ஆகஸ்ட் 2022

**08**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் :

சீரிய சிந்தனை, கூரிய செயலாற்றல் இவை நேரிய மனிதனின் வாழ்வியல் விழுமியங்கள், ஒருவன் தான் எண்ணுகிற அனைத்தையும் உயர்வாக, நேர்மறையாக அமைப்பானேயானால் அவனின் எண்ணங்கள் எளிதாக ஈடேறும். ஒருவேளை அவனின் செயலை வையகம் வாழ்த்தாவிடினும் வரலாறு அதை தனதாக்கும். "சான்றோர் உயர்வானவற்றைச் சிந்திக்கின்றனர். அவர்கள் உண்மைக்கு சாட்சியாய் வாழ்வார்கள் " - என்கிறது விவிலியம். செயல்கள் அனைத்தும் எண்ணத்தின் சக்திக்கு எல்லையே இல்லை. எண்ணம் அனைத்தையும் ஆக்கவல்லது. மனதில் நம்பிக்கை விதைகளை விதைக்கும் போது சாதிக்கும் ஆற்றல் இயல்பாகவே நமக்கு அமைந்துவிடுகிறது. உலகில் எந்த சக்தியாலும் அசைக்கமுடியா சக்தி ஒன்று உள்ளது. அதுதான் மனிதருடைய மனோசக்தி. அது உயர்வுள்ளதாக அமையும்போது எதையும் சாதிக்கலாம் என்ற எண்ணம் மேலோங்குகிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உள்ளத்தின் ஆற்றலையும், எண்ணத்தின் சக்தியையும் திறம்பட அமைத்துக்கொள்வானேயானால் அவன் வையகம் உள்ளவரை வாழ்வாங்கு வாழ்வான். எனவே எண்ணங்களை மேம்படுத்துவோம்.

### சிந்தனைக்கு :

நல் எண்ணம் நன்னிலத்தில் விதைக்கப்பட்ட விதை போல, அவை நாளடைவில் வளர்ந்து நலம் பல நற் பலன் கொடுக்கும். அதுபோல இறைவன் நமக்கு கொடையாக கொடுத்தருளிய அறிவு, ஆற்றலை பிறரோடு பகிர்ந்து கொள்ளும் போது நாம் பெற்ற பேறு பெரிதாகும். நினைப்பவையெல்லாம் நடந்தேறும் என்ற நம்பிக்கை நாள்தோறும் வேரூன்றினால் நாளும் காவியம் படைக்கலாம். கனவுகளை நனவாக்கலாம்.



### தெலசாலின் பொன்மொழி

புனித தோமினிக் : என் அன்பு சகோதரரே, தூய ஆவியாருக்கு செவிமடுங்கள்; நீங்கள் விரும்பாதவற்றை விலக்கிடுங்கள் (கடிதம் 45)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபே 2:8, 3:4

பதிலுரைப்பாடல்
திபா. 119:14,24,72,103,111,131

நற்செய்தி
மத்தேயு 18:1-5,10-14

புனித தெரேசா பெனடிக்டா

ஆகஸ்ட் 2022

**09**

செவ்வாய்க்கிழமை


சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**விண்ணரசில் மிகப் பெரியவன் யார்?**

இறைவன் படைத்து இயல்பு கெடாமல் தொடரும் பட்டியலில் என்றும் இருக்கிறது குழந்தையின் சிரிப்பு. மனிதனின் இதய கீதத்தை இசைக்க கிடைத்த உயிர் வீணைகளே குழந்தைகள். நீங்கள் விண்ணரசில் நுழையவேண்டும் என்றால் இந்த குழந்தைகள் போல் உங்களை நீங்கள் தாழ்த்தி கொள்ளவேண்டும் என்று இறைமகன் இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார். குழந்தைகளே தாழ்ச்சியின் இலக்கணத்தை நமக்கு வகுத்துக் கொடுக்கின்றன குழந்தைகள், அவர்களை இன்று உடல் மற்றும் உள்ளம் சார்ந்த வன்முறைக்கு உள்ளாகின்றனர். வீடு, சமூகம், பள்ளி என்று எங்கு திரும்பினாலும் அவர்களின் மீதான வன்முறை கட்டவிழ்த்துப் படுகிறது. இயேசு கூறும் இறையாட்சியில் குழந்தைகளே மையப் பொருளாய் மாறி உள்ளனர். "யார் பெரியவன்" என்று பதவி மோகம் கொண்டு அங்கலாய்க்கும் சீடருக்கு குழந்தைகளை மாதிரியாக காட்டுகிறார் இயேசு. அவர் "குழந்தையும் தெய்வமும், குணத்தால் ஒன்று! குற்றங்களை மறந்துவிடும் மனத்தால் ஒன்று" என்ற இந்நூல் இறவாக் கவிஞனின் வரிகளைப் போல் ஒவ்வொரு மனிதனும் குழந்தைகள் போல் உள்ள மனநிலைகளைப் பெற்றால் போதும், பூசல்களும் இல்லமால் போய்விடும். புன்னகை மானுடத்தின் பரிமாற்ற மொழியாக மாறிவிடும்.

**சிந்தனைக்கு :**


சின்னஞ்சிறிய என் சகோதரர்களுக்கு நீங்கள் இவற்றை செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள், என்ற இறைவனின் விவிலிய வரிகளுக்கு ஏற்ப நாம் நம் செயல்பாடுகளில் நன்மைத்தனங்களை சின்னஞ்சிறிய சகோதரர்களிடம் சாற்றும் பொழுது இறைவனும் நம் அருகில் இருப்பார். நலம் பல நாம் புரிய தூண்டுகோளாய் அமைவார்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, எப்போதும் மனம் சோர்ந்து விடாதீர்கள். (கடிதம் - 39)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
2 கொரி 9:6-10

பதிலுரைப்பாடல்
தி.பா. 112;1-2,5-9

நற்செய்தி
யோவான் 12:24-26

புனித லாரன்ஸ்

ஆகஸ்ட் 2022

**10**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**தியாக தீபங்களாய்...**

கொடுப்பதில் மகிழ்ந்து பகிர்தலில் சிறந்து வாழும் போது இறையாட்சியில் பங்கேற்பவர்களாக மாறி விடுகிறோம். இறையன்பின் உண்மையான வெளிக்காட்டுதல் பகிர்தலை மையமாக்கியே அமைகிறது. "ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கினாலும் தன் ஆன்மாவிற்கு கேடு விளைந்தால் அதனால் வரும் பயனென்ன" - என்ற விவிலிய அறை கூவல் நம் உள்ளத்திலும் எதிரொலிக்க வேண்டும். இன்றைய நற்செய்தியில் இறைவன் நம்மை பிறரன்பை பேணுபவர்களாக, இறையன்பின் சாட்சிகளாய் மாற நமக்கு அழைப்பு விடுக்கிறார். கோதுமை மணி போல நாம் மகிழ்ந்து பிறருக்காக வாழ வேண்டும் என்ற வாழ்வியல் சவாலை முன்வைக்கிறார். பதவி, பணம், புகழ் என்று வாழும் இச்சமூகத்திற்கு இறைமகன் கிறிஸ்து தன்னையே ஒரு முன்களப் பணியாளராக மாறி "மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்காக தம் இன்னுயிரையும் கொடுப்பதற்காக வந்தார்" என எடுத்துரைத்து அதனை வாழ்ந்து காட்டினார். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், பணியாளராக இருக்கட்டும் என்ற பணிவின் மேன்மையை விரும்பும் பணியாளராக மாற முற்படுவோம். இறையாட்சியில் பங்கெடுப்போம்.

**சிந்தனைக்கு :**


தமக்கென்று வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் தம் வாழ்வை பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வைத் தம் உரிமையாக்கி கொள்வர். - என்பதற்குரிய நிலைவாழ்வை பெற இறைசாட்சிகளாக மாற முற்படுவோம். இலட்சிய வாதிகள் மண்ணில் புதைக்கப்படுவதில்லை, மாறாக விதைக்கப்படுகிறார்கள்.



**தெலசாலின் பொன்மொழி**

புனித லாரன்ஸின் விசுவாசத்தில் வியப்புறுங்கள். ஏழைகள் திருச்சபையின் செல்வங்கள் என அவர்களின்மீது அக்கறை செலுத்துங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசே 12:1-12

பதிலுரைப்பாடல்
திபா : 78:57,58-59,61-62

நற்செய்தி
மத்தேயு 18:21-19:1

புனித கிளாரா

ஆகஸ்ட் 2022

**11**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**மன்னிக்கும் மனப்பாங்கு :**

மனிதனின் செயல்களிலெல்லாம் மிகச் சிறந்த செயல், பிறர் தீங்கிழைக்கும் போது அவர்களை மன்னிப்பதேயாகும். காரணம் மன்னித்தல் தண்டித்தலை விடச் சிறந்தது. மன்னித்தல் மனித குணம் தண்டித்தல் மிருகக் குணம். மன்னிப்பு என்பது மீண்டும் தவறு செய்வதற்கான வழிமுறையல்ல மாறாக அது திருந்துவதற்கான ஒரு சந்தர்ப்பம். பிறர் நமக்குச் செய்த குற்றங்களை பெரிதாக்காமல் அவற்றை மன்னித்து அவர்களை ஏற்றுக்கொள்ளும் நாம் தெய்வீக குணம் கொண்டவர்களாக மாறி விடுகிறோம். அங்க பொறாமையில்லை, பூசங்கள் இல்லை, பகைமை இல்லை, பாசாங்கு இல்லை நல்லெண்ணங்களும், நற்பண்புகளும் செழித்தோங்குகின்றன. உலக உயிர்களிடையே உன்னதப் படைப்பான மனிதனின் உயர்வான குணமே..பிறரை மன்னித்து ஏற்றுக்கொள்வது. இன்றைய விவிலியம் மன்னிப்பின் மனப்பாங்கை நமக்கு வலியுறுத்துகிறது. ஒருவரை மன்னிப்பது ஏழுமுறை மட்டுமல்ல, எழுபது முறை ஏழு முறை என சுட்டிக் காட்டப்படுகிறது. கிறிஸ்து இயேசு சிலுவையடியில் தன்னை இகழ்ந்தவர்களை, இன்னுயிரை எடுத்தவர்களை மனப்பூர்வமாக மன்னிக்கின்றார். " தந்தையே இவர்களை மன்னியும்" - என்று மன்னிப்பு என்ற பண்புக்கு மகுடம் சூட்டுகிறார்.

**சிந்தனைக்கு:**

மனிதனும் புனிதனாகும் மகத்துவம் நிகழவேண்டுமென்றால் அங்கு மன்னிக்கும் மனப்பாங்கு மேலோங்கி இருக்க வேண்டும்.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்னும் துணையும் புகழ்" - என்ற வள்ளுவனின் வாக்கை வாழ்வாக்குவோமா?



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் உங்களையே முழுவதும் கடவுளிடம் அளித்து, அவரின் வெகுமதியை நம்பியிருக்கிறீர்களா? (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசே 16:1-15,60,63

பதிலுரைப்பாடல்
எசா. 12:2-6

நற்செய்தி
மத்தேயு 19:3-12

புனித ஜேன் பிரான்செஸ் தெ ஷாந்தல்

ஆகஸ்ட் 2022

**12**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**உடன்படிக்கை :**

ஒருவருக்கொருவர் அன்பும், நட்பும் கொண்ட அயலானுக்கு அறம் செய்தல் என்பது மானுடத்தின் கடமை. அம்மானுடப் பாங்கை பிரமாணிக்கம் என்ற உடன்படிக்கை பேணிக் காக்கிறது. இறைவன் மனிதனுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் விளைவாகவே தன் மகனை இவ்வுலகிற்கு பரிசாகத் தந்தார். மனிதன் உரைக்கும் வார்த்தைகளுக்கு வலிமை சேர்ப்பது அவன் மேற்கொள்ளும் உடன்படிக்கையின் உறுதிப்பாட்டை பொறுத்தே அமைகிறது. இல்லறத்தின் இனிமைப் பாங்கே இறைவன் முன் ஏற்படுத்தப்படும் உடன்படிக்கையில் ஆணும், பெண்ணும் நேர்மையாக இருந்தாலே போதுமானது அதுபோல துறவற வாழ்விலும் கொடுக்கப்படும் வார்த்தைப்பாட்டை வாழ்ந்து காட்டினாலே நாம் இறையாட்சியில் பங்கெடுக்கும் மகத்துவமிக்க மானுடர்களாக மாறிவிடுகிறோம். இறைவன்மேல் நாம் மேற்கொள்ளும் உடன்படிக்கையை நிர்மூலமாக்கும் தன்னலம், விட்டுக்கொடுக்காத மனநிலை, தியாகமில்லாத வாழ்வு இவைகளை களைந்தெறிந்து புதுவாழ்வு படைக்க இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு அழைப்பு விடுகிறது. ஆம் அன்பும், நட்பும் எங்க உள்ளதோ அங்கே இறைவன் இருக்கிறார்.

**சிந்தனைக்கு :**


இறை மதிப்பீட்டை நாம் வாழ்வின் கீதங்களாக மாற்றி இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்ட திருக்குழுமமாக நான் வாழ தயாராக இருக்கிறேனா? இறையாட்சியின் மதிப்பீடுகளை இன்றைய குழந்தைகளான இளம் தலை முறையினருக்கு என் வாழ்வின் மூலம் கற்றுத் தருகிறேனா?



**தெலசாலின் பொன்மொழி**

கடவுளின் பிரசன்னத்தில் உங்களை பற்றி நினைக்கும்போது, பணிவாக இருங்கள் (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசே 18:1-10,13,30-32

பதிலுரைப்பாடல்
திபா. 51:10-11,12-13,16-17

நற்செய்தி
மத்தேயு 19:13-15

லசாலிய புனிதர்
புனித பெனில்டஸ்

புனித போன்சியான்

ஆகஸ்ட் 2022

**13**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**அன்பு மேலானது :**

உயிர்கள் வாழ்வது அன்பினால்தான் அத்தகைய அன்பினைப் பெற்றிராத கடுஞ்சினத்தை கொண்டோர் தோலால் போர்த்தப்பட்ட வெறும் எலும்புக்கூடுகளாகவே காட்சி தருவர். என் உடமையெல்லாம் நான் வாரி வழங்கினாலும், என் உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும், என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை என்ற புனித பவுலின் வாழ்வியல் சிந்தனை. நமக்கு அன்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. அன்பு பரிவு உள்ளது, பாசம் உள்ளது தன்னலத்தை நாடாது. பிறர்நலத்தையே பேணிப் பாதுகாக்கும் இத்தகைய சிறப்புமிக்க இவ்வுலகின் பண்பினை அன்பு நமக்கு வழங்குகிறது. இறைவன் இவ்வுலகின் மேல் கொண்ட அன்பின் வெளிப்பாடாகாவே தன் ஒரே பேரான மகனை அன்பின் மீட்புக்காக கையளிக்க திருவுளமானார். இத்தகைய இறைவனின் தியாக அன்பைப் பெற்றவர்களாக நாம் மாற வேண்டும். எங்கெல்லாம் அன்பு விரிவடைந்து அகிலத்தை ஆண்டு, மற்ற உயிர்களின் நலனை நாடுகிறதோ அங்கு இறைவன் வாழ்கிறார். இறையாட்சியின் பண்புகள் அங்கே மிளிர்கின்றன. நாமும் நமது பாவ வழிகளை விட்டு இறைவழி சென்று இறையன்பை இவ்வுலகில் பிரதிபலிப்பவர்களாக மாறுவோம்.

**சிந்தனைக்கு :**

வாழ்க்கை சங்கீதம் இரண்டு கம்பிகளின் இன்னிசையால் இசைக்கப்படுகின்றது. ஒன்று தொண்டு மற்றொன்று அன்பு, மனதை மகிழ்ச்சிப் படுத்துகிறது. அன்பை ஆடையாக அணிந்து அவனியை வலம்வர நான் தயாரா?



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, கடவுளின் விருப்பம் உங்களில் நிறைவேற அவரிடம் கேளுங்கள் அவரது வழிநடத்தலில் உங்களையே ஒப்படையுங்கள் (கடிதம் 33)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எரே 38:4-6,8-10

இரண்டாம் வாசகம்
எபிரேயர் 12:1-4

நற்செய்தி
லூக்கா 12:49-53

பொதுக்காலம்
20-ம்
ஞாயிறு

ஆகஸ்ட் 2022
**14**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### பணிவில் பரமனைக் காண்போம்

பண்புகளில் இன்றியமையாதது பணிவு என்பதாகும். பணிவுடைமை தற்பெருமையைக் குறைத்து அடக்கத்தை நமக்கு கற்பிக்கிறது. ஆளுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் தன்னை மாற்றிக் கொள்ளாமல் எப்பொழுதும் இயல்பாக எல்லோரிடமும் மரியாதையுடன் நடந்து கொள்ளுதல் என்பது உண்மையான பணிவாகும். பணிவு என்பது எத்தனையோ வழிகளில் நமது நடைமுறை வாழ்வில் வெளிப்படுகிறது. மற்றவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து நமது விருப்பு, வெறுப்புகளை கட்டுப்படுத்தி வாழும்பொழுது அங்கு பணிவு பிரதிபலிக்கிறது. பணிவுடைமை என்பது ஒருவரை யாவரும் போற்றத்தக்க தெய்வநிலைக்கு அழைத்துச் செல்லும். மாறாக நாம் பணிவின்றி நடக்கும் பொழுது அறியாமை என்ற இருட்டில் நாம் வாழ்ந்து தத்தளிப்போம். பணிவை ஆடையாக அணிந்தவர் தன்னை எந்த இடத்திலும் முன்னிலைப்படுத்திக் கொள்ளவோ, தன் கருத்தைப் பிறர் மீது திணிக்கவோ முற்படமாட்டார். மாறாக தன்நிலை தாழ்த்தி, பிறர்நலனைப் பேணி, வாழ்வின் முன்மாதிரியாய் வாழ்வார்கள். இத்தகைய சிறப்பு மிக்க இறை மதிப்பீடுகளை வாழ்வாக்கும் போது இறைவன் நம்மோடு உறவு கொள்கிறார்.

### சிந்தனைக்கு :

தாழ்ந்த நிலத்தில் தான் தண்ணீர் வந்து நிற்கும் தற்பெருமையுடையவர் அகங்காரத்தை வளர்க்கிறார். தன்னை அனைத்துடன் ஐக்கியப்படுத்துகிறவர் பணிவுடையவர் ஆகிறார். நல்ல பண்புள்ள மனிதர் இன்மையில் ஆனந்தத்தையும் மறுமையில் பேரானந்தத்தை அனுபவிக்கின்றார்.

**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, அனைவருடனும் நட்புணர்வுடன் பழகுங்கள், அனைவருடனும் பணிவாக இருங்கள்
(கடிதம் - 305)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
தி.வெ. 11:19:12:1-6, 10

பதிலுரைப்பாடல்
திபா. 45:9-10,11,15

நற்செய்தி
லூக்கா 1:39-56

புனித
பொனவெந்தூர்

ஆகஸ்ட் 2022

**15**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

## சிந்தனைத் துளிகள்

பெண்ணியம் போற்றும் வீரப்பெண்ணாக மரியாள் இன்றைய நற்செய்தியிலும் பிரதிபலிக்கப்படுகிறாள். அன்னை மரியாள் எலிசபெத்தம்மாளை சந்திக்கும் நிகழ்வு மகிழ்ச்சியை மட்டுமல்ல இருவருக்கும் உள்ள உறவின் வெளிப்பாட்டை எடுத்துரைக்கிறது. இருவரின் சந்திப்பு மனித நிலையில் இறைவனின் ஆற்றல்மிக்க பங்களிப்பை உணர்த்துகிறது. இந்நிகழ்வு கடவுள் மனிதன் மீது கொண்ட அன்பின் வெளிப்பாட்டு நிகழ்வாய் அமைகிறது. "தாழ்நிலையில் நின்ற அடியவரை கடைக்கண் நோக்கினார்." என்ற அவரின் நன்றிப் பெருக்கு மிக்க பாடல் இறைவன் எல்லா நிலைகளிலும் தன்னைத் தேடிவந்த யாவரையும் உயர்த்துகிறார் என்பதை மெய்ப்பிக்கிறது. உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். என்ற அவரின் கீதம் எளியவருக்கும், வலிமையற்றோர்க்கும் ஆறுதல் மொழிகளாக சிறப்பு மிக்க இறைவனின் அளப்பரிய ஆற்றலின் மகிமையை நாம் அன்றாட வாழ்வில் கண்டு உணர்ந்திருக்கின்றோமா?

மிளிரும் ஆர்வத்தோடு இறைத்தேடல் என்பது இறை நம்பிக்கையின் உள்ளார்ந்த மானுடத்தின் வெளிப்பாடாய் அமைகின்றது. நமது லசாலிய வாழ்வுப் பயணத்தில் இறைநம்பிக்கையை மையமாகக் கொண்ட நமது பயணம் பல்வேறு இறை வல்லமையை வெளிப்படுத்துவதாய் ஒன்றாய் அமைகிறது.

**சிந்தனைக்கு :**

தியாக உணர்வால் பெற்ற சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்படுகிறதா? எளியவருக்கும், வறியோருக்கும் சுதந்திரக் காற்று சுதந்திரமாய் வீச வாழ்வியல் முறைகள் வழியமைக்கிறதா? அன்னை மரியாவின் விடுதலைப் பாடல் வரிகள் வாழ்வாக்கப்படும் போது சமய, சமூக, பொருளாதாரச் சுதந்திரத்தை அனைத்து மக்களும் பெற்று, எல்லோரும் எல்லாமும் பெற்ற சுதந்திர நாடாக நாம் தாய் நாடும் மாறும்.

### தெலசாலின் பொன்மொழி

புனித கன்னி மரியாள் திருவார்த்தையின் பேழை, தூய ஆவியின் இருப்பிடம். வானதூதர்கள் அவள் முழு உடலோடும், ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்து சென்றனர். அங்கே அவர் தன் மகனின் அருகில் அவருக்குரிய மதிப்பை ஏற்றுக்கொண்டார். (MSF)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசே 28:1-10

பதிலுரைப்பாடல்
இச: 32:26,27,28,30,35-36

நற்செய்தி
மத்தேயு 19:23-30

ஹங்கேரி நாட்டு புனித ஸ்டீபன்

ஆகஸ்ட் 2022

**16**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**இறையோடு இணைதல் :**

மனிதன் தன் இவ்வுலக வாழ்வின் சுமைகளைக் களைந்து இறை நம்பிக்கையோடு இறைவனைத் தேட வேண்டும். இறைவன் மனிதன் தேடுகின்ற அமைதியையும், ஆறுதலையும் பெற்றுத்தரும் உறுதிப்பாட்டை இன்றை விவிலிய வாசகம் வலியுறுத்துகிறது. இறைவனை முழுமையாக நம்பி அவன் தானே துணை என்று எண்ணுவோர்க்கு இறைவன் அரும்பெரும் கொடைகளால் நிரப்புகிறார். "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்து இருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" – என்ற வாக்குத்தத்தத்தை மனுக்குலத்திற்கு வாழ்வாக்கி, வழியாகி, ஒளியாகி வாழும் இறைவன் நம் வாழ்விலும் அற்புதங்களை நிகழ்த்த வேண்டுமென்றால் நாம் நம்மிடம் உள்ள ஆணவம் மற்றும் அழிவு நிலைகளிலிருந்து விடுதலை பெற்று தாழ்ச்சி, பிறர்நல வாழ்வு, இவற்றை வாழ்வின் உடைமைகளாக மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். இறைவனை அன்பு செய்யவும், அவருக்குப் பணி புரியவுமே நாம் ஒவ்வொருவரும் படைக்கப்பட்டுள்ளோம். இறை அச்சம் இல்லாத அறிவோ, செல்வமோ பயனற்றவை. "இறைவனால் எல்லாம் முடியும்" – என்ற வார்த்தை வரிகள் நம் வாழ்வில் வாழ்வாகட்டும்.

**சிந்தனைக்கு :**

மனிதன் தன் வாழ்வின் சொல்லுக்கும், செயலுக்கும் ஒரு தொடர்போடு வாழவேண்டும் என்று இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. உண்மைக்கு சாட்சிகளாய் மாறி, எதிர்மறை எண்ணங்களை புறந்தள்ளி இறையாட்சியில் பங்குபெற நாம் தயாராக இருக்கின்றோமா?



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, நீங்கள் மன நிம்மதியுடன் இருப்பது எனக்கு மகிழ்வை தருகிறது. கடவுள் உங்களை அதேநிலையில் வழிடத்த அவரிடம் வேண்டுகிறேன். (கடிதம் – 38)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசே 34:1-11

பதிலுரைப்பாடல்
திபா. 23:1-3,3-4,5,6

நற்செய்தி
மத் 20:1-16

புனித ஹயாசிந்த்

ஆகஸ்ட் 2022

**17**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### கடவுளின் வார்த்தை உயிருள்ளதா?

இறைவார்த்தை என்பது அன்பை அடிப்படையாக கொண்டது. இறையாட்சியில் முன்மொழியப்படும் அன்பிற்கு ஈடு இணை எதுவும் இல்லை. மனிதனது சிந்தனை போலன்றி இறைவன் மாற்றுச் சிந்தனையில் பயணிக்கின்றார். அதுவே மனித நேயச் சிந்தனை. தனது இறையாட்சியில் பங்கெடுக்கும் மனிதருக்கு பாகுபாடு ஏதும் இல்லாமல் மனித நேயத்தோடு, நேர்மைக் குணத்தோடு சமமாக நடத்துகிறார். இன்றைய நற்செய்தியில் சுட்டிக்காட்டப்படும் விண்ணரசைப் பற்றிய நிகழ்வு மனித நேயச் சிந்தனையை நமக்கு வலியுறுத்துகின்றது. இறைவனின் கண் வழியாக பார்க்கும்போது, நீதி, நியாயம் ஆழமாக அர்த்தம் பெறுகின்றது. சமூகத்தில் கடைநிலையானவராக கருதப்படும் ஏழை எளியவருக்கு முதல் மரியாதை தந்த அவரின் தேவைகளை உணர்ந்து கண்ணீரைத் துடைத்து வாழும்போது நாமும் இறையாட்சியில் எளிதாக உட்புக முடிகிறது. லசாலிய இறைவாழ்வும் நமக்கு இத்தகைய நிலையையே எடுத்துக்காட்டுகிறது. நமது அன்றாட அலுவல்களில் சாதி, மதம், இனம் கடந்த நிலையில் பிறரை சமமாக நடத்தும் எண்ணம் உயர்ந்த எண்ணமாக பேணப்பட வேண்டும். அத்தகைய நிலைகளை நான் வாழும் இச்சமூகத்தில் பிரதிபலிக்க எனது பங்களிப்பு என்ன? சிந்திப்போம்.

### சிந்தனைக்கு :

இறைவார்த்தையின் படி வாழ்ந்து, இறை நம்பிக்கையில் நாம் வேரூன்ற வேண்டுமென்றால் நாமும் சமத்துவமுள்ள சமுதாயத்தை உருவாக்க முயலவேண்டும். இத்தகைய ஏற்றத்தாழ்வற்ற எழிலார்ந்த சமுதாயத்தை உருவாக்க தடையாய் உள்ள காரணிகளை களைய முற்படுவோமா?



**தெலசாலின் பொன்மொழி**

கடவுளுடன் நீடித்த உறவில் இருக்க, நீங்கள் அவருடன் தொடர்ச்சியான உரையாடல் கொள்ள வற்புறுத்த படுகிறீர்கள். (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

"அழைக்கப்பட்டவர்களோ பலர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர்" - என்பதை மையப் பொருளாக்கி இன்றை விவிலிய வாசகம் இறைவனின் திருவிருந்திற்கு அழைப்பு விடுக்கிறது. உயர்ந்தோர், தாழ்ந்தோர், வலியோர், எளியோர் என அனைவருக்கும் சமமாக கருதப்பட்டு, அழைக்கப்பட்ட இவ்விருந்தில் பங்கேற்றோர் பலராய் இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்டோர் சிலராய் மாறிப் போயினர். இறையருளை நாம் முழுமையாகப் பெற்றவர்களாக மாறவேண்டுமென்றால் இறையாட்சியின் விழுமியங்களான உண்மை, அன்பு, நீதி, சமத்தவம், சகோதரத்துவம் இவைகளை ஆடையாக அணிந்திருக்க வேண்டும். இறைவன் எடுத்தியம்பும் புதிய விடியலில் ஏற்றத் தாழ்வற்ற சமூகம் வெளிப்படுகிறது. அங்கு அன்பும், அமைதியும், அருளும் ஆற்றலும் மானுடத்தின் மதிப்பீடுகளாக பிரதிபலிக்கப்படுகின்றன. இத்தகைய சிறப்புமிக்க வாழ்வியல் சமூகத்தில் அன்பும், அறனும் நிலைத்திருந்து பண்பும், பயனும் வெளிப்படுத்தப்பட வேண்டும். கடவுள் காட்டும் இவ்விறைச் சமூகத்தில் பங்கேற்க நாம் தகுதியானவர்கள் தானா? என்பதை உணர்ந்து இறையாட்சியின் சீடர்களாக உருமாற உறுதி ஏற்போம்.

**சிந்தனைக்கு :**

ஒருவருக்கொருவர் அன்பும், அயலானுக்கு அறமும் செய்து வாழ்ந்தால் இறைவனின் பிள்ளைகளாக நாம் உருமாறுவோமாக. இறையருள் மட்டுமே மனிதனுக்கு நிறைவான மகிழ்வையும், நிறைவாழ்வையும் தரும். அதனைப் பெற்று இறையாட்சியில் மானுட மதிப்பீடுகளை மலர வைக்க நான் தயாரா?

முதல் வாசகம்
எசே 36:23-28

பதிலுரைப்பாடல்
திபா. 51:10-11,12-13,16-17

நற்செய்தி
மத்தேயு 22:1-14

புனித
ஹெலனா

ஆகஸ்ட் 2022

**18**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, உமது உடன் சகோதரர்கள் உங்களது நடத்தை கண்டு வருந்துகிறார்கள், நீங்கள் சோகமாகவும், சிறையில் இருப்பது போலவும் இருக்கிறீர்கள் என்று வருந்துகிறார்கள்
(கடிதம் - 96)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசே 37:1-14

பதிலுரைப்பாடல்
தி.பா 107:2-3,4-5,6-7,8-9

நற்செய்தி
மத்தேயு 22:34-40

புனித ஜான் யூட்ஸ்

ஆகஸ்ட் 2022
**19**
வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**அன்பின் வெளிப்பாடு :**

நற்செயல்கள் பறைசாற்றப்படும்போது அவை இன்னும் மிகுதியாக வளர்கின்றன. நாம் நம்மை அன்பு செய்வதுபோல் பிறரையும் அன்பு செய்ய வேண்டும். அப்பொழுது தான் கண்ணுக்கு புலப்படாத கடவுளை முழு இதயத்தோடு, முழு மனதோடும் அன்பு செய்ய முடியும். மனிதன் தான் சார்ந்த சொந்தங்களுக்கு வலுவூட்டுபவை அவனின் நற்செயல்களே. செயலற்ற விசுவாசம் உயிரற்று போகும் என்பார்கள். ஒரு மனிதனை உயர்த்தவதும், தாழ்த்துவதும் அவனவன் நற்செயல்களைப் பொறுத்தே அமையும். கடவுள் முழுமையானவர், அந்த முழுமையான கடவுள் நமக்கு வேண்டுமென்றால் நம்மில் பகிர்தல் என்ற பண்பு நற்செயல்களின் வழியாக நம்மில் பிரதிபலிக்க வேண்டும். இருப்பதை பகிர்ந்து, கொடுப்பதில் சிறந்து வாழும்போது தான் இறைவன் முழுமையாக அன்பு செய்ய முடியும். இறைவன் இந்த மானுடத்தை அன்பு செய்து, தன் இன்னுயிரையே மானுடத்தின் மீட்புக்காக கையளித்து, முன்மாதிரியாய் உருவாகினார் அன்பை நாமும் நமது அயலானிடம் வெளிக்காட்ட வேண்டும் என்று பேராவல் கொள்கிறார். இறைவனின் மீட்புத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற நாம் நம்மை பிறரின் நலனுக்காய் ஒப்புக்கொடுக்க தயாரா?

**சிந்தனைக்கு :**

இறைவனின் பிறரன்புப் பண்பும், தன்னலமற்ற பகிர்தலும் நம் வாழ்வின் கேடயங்களாக மாற வேண்டும். இவை ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் வரங்களையும், மகிழ்ச்சியையும் வாரி வழங்கவேண்டும். இத்தகைய சிறப்புமிக்க இறையாட்சியின் மீட்புத் திட்டத்தில் பங்கேற்க நான் தயாரா?



**தெலசாலின் பொன்மொழி**

எப்போதும் மகிழ்ச்சியுடன் உற்சாகமாக இருங்கள். சோகமாகவோ அல்லது நோயுற்றோர் போல இருக்காதீர்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசே : 43:1-7

பதிலுரைப்பாடல்
திபா. 85:8-9,10-11,12-13

நற்செய்தி
மத்தேயு 23:1-12

புனித
பெர்னார்டு

ஆகஸ்ட் 2022

**20**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**எண்ணத் தூய்மை :**

எண்ணங்களுக்கு தனிச் சக்தி உண்டு. அந்த எண்ணமே நல்லெண்ணமாக உருமாறும் போது அங்கு சொல்லும், செயலும் தூய்மையாக மாறிவிடும். உலக நல்லெண்ண தினத்தை நாம் இன்று கடைபிடிக்கும் போது நல்லெண்ணத்தின் நற்பண்புகளை நாம் முழுமையாக பெற அழைப்பு விடப்படுகிறது. "தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பார்கள் - என்கிறது விவிலியம். கரைபடாத கைகளும், மாசற்ற மனமும் உடையவர் இறைவனின் முழுமையான ஆசீர் பெற்றவர். நம்முடைய எண்ணங்களின் தரத்தை நாம் உயர்த்திக் கொள்ளும் போது நம் வாழ்க்கைத் தரமும் உயரும் என்பது உண்மை. நம்முடைய தூய்மையான எண்ணங்களைப் பொறுத்தே நம்முடைய எதிர்கால வாழ்க்கையும் அமையும். எண்ணங்களே செயல்களாக மாறுகிறது. அச்செயல்களே சக்தியாக உருவெடுத்து மனிதனைச் செம்மைப்படுத்துகிறது. தூய்மையான எண்ணத்தை வெளிப்படுத்தும்போது அது இலட்சியமாக உருவெடுக்கிறது. நம்முடைய எண்ணங்களும், செயல்பாடுகளும் பிறரை மகிழ்விக்கும் வகையிலும், பாராட்டு பெரும் வகையிலும் அமைந்தால் வெளிவேடமுள்ள பரிசேயத்தனத்தையே வெளிக்காட்டும். மாறாக உள்ளன்பு பெற்று நல்லெண்ணம் கொண்டு நாளும் வலம் வந்தால் இறைவனின் ஆசீரை எளிதாய் பெறுபவர்களாக நாம் மாறிவிடுவோம்."

**சிந்தனைக்கு :**

மனிதனின் எண்ணங்களே மனிதனை உருவாக்குகின்றன. வண்ணம் கலந்தால் ஓவியம் மலரும்! எண்ணம் உயர்ந்தால் வாழ்க்கை உயரும். நமது எண்ணத்தின் தன்மையையும், தரத்தையும் பொறுத்தே நமக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும். அதனால் நமது எண்ணத்திற்கு வண்ணம் சேர்ப்போம். வளம்பல பெறுவோம்!



**தெலசாலின் பொன்மொழி**

உங்களில் பணிவிற்கேற்ப, நீங்கள் கடவுளின் அருளை பெறுவீர்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 66:18-21

இரண்டாம் வாசகம்
எபி 12:5-7, 11-13

நற்செய்தி
லூக்கா 13:22-30

பொதுக்காலம்
21 - ம்
ஞாயிறு

ஆகஸ்ட் 2022
**21**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**இறையன்பின் மீட்பு :**

இறைவனின் மீட்பு என்பது அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் என்ற வாழ்வியல் மதிப்பீடுகளை மையப்படுத்துகிறது. இறையன்பின் மீட்பு திட்டத்தில் நாம் பங்கு பெற வேண்டுமென்றால் இறையன்பின் சாட்சிகளாய் விளங்கும் மதிப்பீடுகளை வாழ்வாக்க வேண்டும். சுயநலமுள்ள, இயந்தரத்தனமாக வாழ்வியல் சூழலில் இத்தகைய மதிப்பீடுகளை வாழ்வாக்குவது என்பது மிகப்பெரிய காரியம். ஆனால் இச்சவால்களை எதிர்கொண்டு இறைவனின் மீட்பில் நாம் பங்குபெற இன்றைய இறைவார்த்தை நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

ஒருவருக்கொருவர் அன்பும், அயலானுக்கு அறமும் புரிந்து, சமூகத்தில் நீதியும், நேர்மையும் மிளிர நாம் கருவிகளாய் மாறும்போது இறைவன் தனது மீட்புப் திட்டத்தில் நம்மை உரிமையாளர்களாக மாற்றுகிறார். இச்செயல்பாட்டில் நாம் முரண்படும்போது "நீங்கள் எவ்விடத்தாரோ எனக்கு தெரியாது" என நம்மை மறுதலிக்கின்றார்.

வெளிவேடக் கிறித்தவர்களாக நாம் இல்லாமல் விவிலிய வார்த்தைகளுக்கு உயிரூட்டுபவர்களாக நாம் வாழும் போது இறையழைப்புக்கு நாம் செவிகொடுக்க முடியும்.

**சிந்தனைக்கு :**

வாழ்வின் எத்தகைய சூழலிலும் நாம் சமரசம் செய்து கொள்ளாமல் உண்மைக்கு சாட்சிகளாய் மாறும்போது சீடர்களை மேன்மைப்படுத்திய இறைவன் நம்மையும் மேன்மைப்படுத்துகிறார். இறையாட்சியின் மதிப்பீடுகளை மனம் தளராது வாழும்போது அனைவருக்கும் மீட்பு சாத்தியமாகின்றது.



**தெலசாலின் பொன்மொழி**

உங்களின் குழுமத்தில் தூய ஆவி வாழ கடவுளிடம் வேண்டுங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

முதல் வாசகம்
2 தெச 1:1-5, 11-12

பதிலுரைப்பாடல்
திபா. 96:1-2,3,4-5

நற்செய்தி
மத்தேயு 23:13-22

அரசியான மரியா

ஆகஸ்ட் 2022
22
திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. கென்னடி FSC

## சிந்தனைத் துளிகள்

"கண்டதே காட்சி கொண்டதே கோலம்" – என்று வாழும் இவ்வுலகில் இப்படித்தான் வாழவேண்டும் என்று நெறிமுறைகளுக்கு உட்படுவது என்பது வினாக்களுக்கு விடையற்ற ஒன்றாக மாறிவிடுகிறது.

சட்டங்கள் இயற்றி, திட்டங்கள் போட்டு சாமானிய மக்களை வெறுத்து வாழும் இன்றை தலைமுறையின் தலைவர்களை குருட்டு வழிகாட்டிகளே! என்று இறைவன் சாடுகிறார். சொல்லுக்கும், செயலுக்கும் பொறுத்தமற்று வாழும் ஆன்மீகரை ஆண்டவர் ஒருநாளும் ஏற்பதில்லை.

விண்ணரசில் இருந்து வெகுதூரம் பயணித்து விட்டு ஆண்டவனைத் தேடும் எந்த ஒரு செயல்பாடும் பயனற்ற ஒன்றாய் மாறிவிடும். நாம் இந்த நிலைகளிலிருந்து மனம் மாற இயேசு இன்றைய இறைவார்த்தை வழியாக அழைப்பு விடுக்கின்றார்.

நாம் நமது இறைவாழ்வுப் பயணத்தில் சொல்லும், செயலும், வாழ்வும் வழிபாடும் ஒரு சேர பயணிக்க உறுதுணையாய் இருக்கின்றோமா?

**சிந்தனைக்கு :**

இறைவார்த்தையின்படி வாழ்வதும், செயல்படுவதும் சவாலான ஒன்றேயாகிலும் அதை திறம்பட நாம் மேற்கொள்ள இறைவன் துணையாய் இருக்கிறார். இறைவனின் அத்தகைய வழிகாட்டுதலோடு சவால்களை, சாதனைகளாக மாற்றி பிறருக்கு முன்மாதிரியான வாழ்க்கை வாழ நான் தயாரா?

### தெலசாலின் பொன்மொழி

நாம் இயேசுவை அன்பு செய்தால் மற்றும் இயேசு நம்மை அன்பு செய்தால், நம்மால் கன்னி மரியாளை அன்பு செய்யாமல் இருக்க முடியாது. ஏனெனில் இயேசுவிற்கும், அன்னை மரியாளுக்கும் இடையேயான அன்பு வியக்கத்தக்கது. (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
2 தெச 2:1-3,14-17

பதிலுரைப்பாடல்
திபா. 96:10,11-12,13

நற்செய்தி
மத்தேயு 23:23-26

லீமா நகர் புனித ரோஸ்

ஆகஸ்ட் 2022

**23**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**உண்மை உணர்தல்:**

நானே வழியும், உண்மையும் வாழ்வும் என்று பறைசாற்றும் இறைவன் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் பிறருக்கு எத்தீங்கும் செய்யாமல் நன்மையை மட்டுமே விரும்பி, பிறரிடம் நேர்மையான வாழ்வை வாழ இன்றைய இறைவார்த்தையின் வழியாக நமக்கு அழைப்பு விடுகிறார்.

தாயின் கருவறையிலேயே நம்மைத் தேர்ந்துகொண்டு, பெயர்சொல்லி அழைத்த இறைவன் வாழ்வியல் விழுமியங்களோடு வாழ நமக்கு அழைப்பு விடுகிறார். திருச்சட்டத்தின் முக்கிய போதனைகளான நீதி, இரக்கம், இறைநம்பிக்கை, உண்மை இவைகளை சீர்கொண்டு நாம் கடைபிடிக்க நற்செய்தி நம்மை அழைக்கிறது.

ஏற்றத்தாழ்வுள்ள இச்சமூகத்தில் பிறரை சமூகமாக நடத்தி உண்மைக்கும், நீதிக்கும் சாட்சியாய் வாழுதல் என்பது சவால்மிக்க காரியமே! பகட்டாய் உடைஉடுத்தி வருபவரை பாங்காய் நடத்துவதும், தோற்றத்தில் எளியவராய் உள்ளவரை முறையற்று நடத்துவதும், நமது அன்றாட பணித்தளங்களில் அரங்கேறும் கசப்பான உண்மைகளே என்றால் அது மிகையாகா! எளியவரையும் இறைவனின் சா யலால் நடத்தும் மனப்பாங்கு நம்மில் செயலாற்றம் பெறவேண்டும்.

**சிந்தனைக்கு:**

உள்ளத்தின் சிந்தனைகளையும், நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும் கடவுளின் வார்த்தைக்கு உயிரூட்டம் அளிக்க நமது அன்றாட செயல்பாடுகளில் பரிசேயத்தை வேறறுத்து உண்மைக்கு சாட்சிகளாய் வாழ்ந்து செயல்பட நமது வாழ்க்கை முறைகளை வழியமைப்போமா?



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, கடவுள் அவரின் அருளை உம்மீது பொழிய உமக்காக வேண்டுகிறேன்.
(கடிதம் – 29)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
திவெ 21:9-14

பதிலுரைப்பாடல்
திபா. 145:10-13,17-18

நற்செய்தி
யோவான் 1:45-51

புனித பார்த்தலமேயு

ஆகஸ்ட் 2022

**24**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### கடவுளைக் கண்டு கொள்ளுதல் :

நமது வாழ்க்கையை நாம் எவ்வளவு திறம்படச் செதுக்கி அமைத்தாலும் அன்பு என்ற ஆண்டவன் அருளை பெறவில்லையென்றால் அது கூரையில்லாத வீட்டிற்கு சமமாக மாறிவிடும். இறையருளே அனைத்தின் அடித்தளம் என்பது ஏற்றுக்கொண்டு வாழ்வோருக்கு இன்னல்களும், துன்பங்களும் இல்லாமல் போய் வாழக்கை வனப்பாகும்.

இத்தகைய சிறப்புமிக்க இறையருளை நம் அன்றாட வாழ்வில் அனுபவித்து வாழும் அனுபவ வாழ்வு என்பது எல்லோருக்கும் எளிதாய் கிட்டாது. மாறாக இறைவனை உள்ளன்பு தேடலோடு தேடுபவருக்கே அது கிடைக்கும்.

இன்றைய நற்செய்தியில் இறைவன் இயேசுவை நத்தனேயல் கண்டு கொண்டு மகிழ்ந்ததை காட்சியாய் நாம் பார்க்கிறோம். இறைவன் நம் அன்றாட வாழ்வில் அனுதினமும் உடன் வருகிறார். நாம் அதை மறந்து நமது ஊனக் கண்களால் கடவுளைத் தேடும் படலத்தில் காலத்தை செலவிடுகிறோம். இறைவனைக் காண நமக்கு எளிய மனது ஒன்று இருந்தால் போதும். இறைவன் நமது உள்ளக்குடிலில் தங்குவார், உள்ளொளியான மெய்ஞானத்தை நமக்கு அருளுவார்.

### சிந்தனைக்கு :

மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கமே கடவுளை அன்பு செய்யவும், அவரால் அன்பு செய்யப்படவுமே. மாறாக அவ்வருளை நாடாத நமது வாழ்வோ, வளமோ பயனற்றவாய் மாறி போகும் நான் எனது வாழ்வில் இறைவனைக் கண்டு கொள்ள முயலுகிறேனா?



### தெலசாலின் பொன்மொழி

புனித பார்த்தலேமியு திருத்தூதர் : இறைவனின் நற்செய்தியை சுமந்து செல்ல எத்தகைய வரம் பெற்றிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் ஞானத்தையும், அறிவையும் கொண்ட புதையல் ஆகும். விசுவாசத்துடன் இதை உங்கள் வாழ்வில் பயிற்சி செய்யுங்கள் (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS-INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 கொரி 1:1-9

பதிலுரைப்பாடல்
திபா. 145:2-3,4-5,6-7

நற்செய்தி
மத்தேயு 24:42-51

புனித லூயிஸ்

ஆகஸ்ட் 2022
**25**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**விழிப்புணர்வு :**

ஒருவர் செய்த நன்மை தீமை தினை அளவே ஆயினும் சான்றோர் அதனைப் பணை அளவாக மதிப்பர். இறைவன் நமக்கு வாழ்வைக் கொடுத்து வழிகாட்டுகிறார். ஆனால் மனித வாழ்வில் பல்வேறு சூழல்களில் படைத்த பரம்பொருளை மறந்து செயல்படுகின்ற நிலை பெரிதாக இருக்கிறது. தன் நிலை உணர்ந்து விழிப்புணர்வுடன் வாழும் வாழ்க்கையை சிறந்த வாழ்வாக கருதப்படும்.

படைத்தவனை நினைத்து படைப்பிற்கு அன்றாடம் நன்றி கூறும் நல்லோர்களாக நாம் உருமாற வேண்டும். நம் உடலைப் படைத்து, உயிர் என்ற சக்தியை உள்ளே வைத்து இயக்கும் பேராற்றலுக்கு நாம் நன்றியுணர்வுடன் இருந்திருக்கிறோமா! அந்த நன்றியுணர்தல் என்ற பண்பு நம்மில் இருக்கும்போது எல்லாம் வல்ல இறைவனை எப்பொழுதும் நினைத்து, வாழ்விற்கு வசந்த கீதம் இசைப்போம். இந்நிலைப் பண்பை நாம் பெற விழிப்புடன் இருத்தல் அவசியமாகிறது.

தலைவன் வருகையை உணர்ந்து நன்றியுணர்வுடன் செயல்படும் பணியாள் பேறுபெற்றவன். ஆகவே எப்பொழுதும் விழிப்பாய் இருங்கள் என்று இயேசு இன்றைய நற்செய்தியின் மூலம் நமக்கு அழைப்பு விடுகிறார். நன்றி உணர்வு ஒருவரை விழிப்பு நிலையிலேயே வைத்திருக்கும். எப்பொழுதும் கடமையுணர்வுடன் காக்கும் கடவுளுக்கு நன்றியுணர்வு கொண்டவர்களாக நாம் உருமாறுவோம்.

**சிந்தனைக்கு :**

தாகத்தால் தவிக்கும் ஒருவனுக்குத் தரும் ஒரு சொட்டுத் தண்ணிருக்கு முன்னால் ஓராயிரம் முத்துக்கள் ஒருபோதும் ஈடாகாது. நம் வாழ்வை நமக்கு பரிசாகத் தந்து வழிநடத்தும் வல்ல இறைவனை வாயாரா வாழ்த்துவோம். நன்றியுணர்வு மிக்கவர்களாக நாமும் வலம் வருவோம்.



**தெலசாலின் பொன்மொழி**

கடவுள் தனது அன்பாலும், அருளாலும் உங்கள் இதயத்தை ஆளுவராக. (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

மானிட மகன் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கும் இருவகைப் பெண்களின் பலத்தையும், பலவீனத்தையும் இன்றைய நற்செய்தி நமக்கு சுட்டிக்காட்டி, இறை அழைப்பை ஏற்றுக்கொள்ள நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுப்பதை இன்றைய இறைவார்த்தையில் நாம் காண்கிறோம்.

நற்செயல்கள் புரிவதற்கும், நலம் பல செய்வதற்கும் உள்ளமும், உடலும் ஒரு சேர தயாரிப்பு நிலையில் இருக்க வேண்டும். சேவைகள் பல ஆற்றுவதற்கு சிந்தையும், செயலும் சீருடன் அமைய வேண்டும். இந்நிலைகளை நாம் பேதமின்றி பெரும்போது தான் படைத்தவரின் நோக்கத்தை நிறைவேற்றும் கருவிகளாக நாம் மாறுகிறோம். விழிப்புடன் இருந்து, விவேகத்துடன் காரியங்களை செயல்நிலைக்கு செலுத்தும் போது தான் உண்மையான மாற்றங்களை இம்மண்ணில் விதைக்க முடியும்.

கடவுள் கொடுத்த அறிவையும், ஆற்றலையும் நம் தேவைக்கு பயன்படுத்தாமல் பிறர் சேவைக்காக பயன்படுத்த முயல வேண்டும். நமது ஞானமும், மடமையும், வலிமையும், வலுவின்மையும் உலகப்பார்வையில் இல்லாமல் இறைப்பார்வையில் நடைபோடுகின்றதா? சிந்திப்போம்.

**சிந்தனைக்கு :**

இறைவன் எனக்கு அருளிய அழைப்பை ஏற்று முழுமையான இறையருளைப் பெற்று நான் செயல்படுகின்றேனா? இறையருளின் தேவையை உணர்ந்து செயலாற்ற போதுமான ஒளியாற்றலும் உள்ளாற்றலும் என்னிடம் உள்ளதா? அல்லது இவற்றைப் பெற எனது முயற்சிகள் தான் என்ன? சிந்திப்போம்.

முதல் வாசகம்
1 கொரி 1:17-25

பதிலுரைப்பாடல்
திபா. 33:1-2,4-5,10-11

நற்செய்தி
மத்தேயு 25:1-13

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் மரியா

ஆகஸ்ட் 2022

**26**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, எவரின் குறைகளையும் பேசமாட்டேன் என்பதை உங்கள் சட்டமாக எடுத்துக்கொள்ளுங்கள். (கடிதம் - 105)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
1 கொரி 1:26-31

பதிலுரைப்பாடல்
திபா. 33:12-13,18-19,20-21

நற்செய்தி
மத்தேயு 25:14-30

புனித மோனிக்கா

ஆகஸ்ட் 2022

**27**

சனிக்கிழமை

## சிந்தனைத் துளிகள்

இறைவன் தான் படைத்த இவ்வுலகைச் செம்மைப்படுத்த கருவிகளாக நம்மை தேர்ந்தெடுத்து அழைத்துள்ளார். அத்தகைய கருவிகளாக கருதப்படும் நாம் நம்மிடம் உள்ள ஞானத்தையும், ஆற்றலையும் இறைமேய்ப்புப் பணிக்கே பயன்படுத்த வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி வாசகங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

கிறிஸ்துவிடமிருந்து வருகின்ற ஞானம் என்பது நாம் மீட்படைய பயன்படுகிறது என்பது மட்டுமல்லாமல் பிறரையும் இறை மீட்புக்கு ஏற்றவர்களாக மாற்ற வேண்டும். என்பதை மையப்படுத்தி இன்றைய வாசகங்கள் எடுத்துரைக்கின்றன. இறைவன் ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில் தாலந்து போன்ற திறமைகளை வழங்கியுள்ளார். அத்திறமைகளை முழுமையாக பயன்படுத்தி, இறையாட்சியின் இறை மீட்புத் திட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டும்.

தன்னிடம் உள்ள செபம் என்ற தாலந்தை முறையாக பயன்படுத்தி தன் மகனின் வாழ்வில் மாற்றம் விதைத்த இன்றையப் புனிதை மோனிக்கா, இறையருளால் விளையும் ஆற்றலை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் திகழ்கிறாள்.

**சிந்தனைக்கு :**

இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து அளித்த தாலந்தை நாம் முறையாகப் பயன்படுத்தும் போது அவை இரட்டிப்பாகி பல மடங்கு பலன் கொடுக்கின்றன. இறைவன் எனக்கு கொடுத்ததை பிறரோடு பகிர்ந்து அவரின் நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனாக வலம் வருகின்றேனா?



சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

**தெலசாலின் பொன்மொழி**

எத்தனை முறை இயேசு கிறிஸ்து உங்களை அழைத்திருப்பார்? இதோ, நான் நாளை மனம் மாறிடுவேன் என புனித, அகுஸ்தினார் போல நீங்கள் இருக்கவில்லையே? இதை தினமும் சொல்வீர்களா? MSF)

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

## சிந்தனைத் துளிகள்

இறைவன் அழைக்கும் திருவிருந்தில் பங்கேற்க அழைக்கப்பட்டவர்களின் நிலை பற்றியும், அழைக்கப்படுவதின் நோக்கம் பற்றியும் இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு எடுத்தியம்புகிறது.

பிரதிபலன் பார்க்காமல் நாம் செய்யும் கடுகளவு தொண்டு கூட கடவுளால் மலையளவு கொண்டதாக கருதப்படும். இறைவன் நம்மை நமது அன்றாட வாழ்வில் அற்புதங்கள் புரிபவர்களாக நாம் மாற நமக்கு அழைப்பு விடுக்கிறார். அந்த அழைப்புக்கு செவி மடுக்கும் நாம் தாழ்ச்சியை ஆடையாக அணிந்தவர்களாக வலம் வர நம்மை பணிக்கிறார். நாம் நெல்மணிகள் ததும்பும் கதிர் எவ்வாறு தலைகுணிந்து தாழ்ச்சியை வெளிப்படுத்துவது போல பணிவில் நிறைவு காண்பவர்களாக மாற இன்றைய நற்செய்தி வாசகம் நம்மை அழைக்கிறது.

கடவுளின் இறையாட்சியில் நாம் நம்மை தாழ்த்துகிறபோது அவர் நம்மை உயர்த்துவார். இறையாட்சியில் தாழ்ச்சி என்ற பண்பு மிகப்பெரிய உன்னதத்தை பெற்றிருக்கிறது. இறைவனின் அன்பை நாள்தோறும் சுவைக்க நாம் தாழ்ச்சி என்ற பண்பைப் பெற முயல வேண்டும்.

**சிந்தனைக்கு :**

இறையாட்சியில் பணியாளர்களாக அழைக்கப்பட்டு இருக்கின்ற நாம் தாழ்ச்சி என்ற பண்பைப் பெற்று உலகில் தாழ்வு நிலையில் இருக்கின்ற, ஏழைகள் புறந்தள்ளப்பட்டோர், எடுக்கப்பட்டோர், உரிமை வாழ்வுக்காய் போராடுபவர்களை உயர்த்துபவர்களாக நாம் உருமாற வேண்டும்.

முதல் வாசகம்
சீராக் 3:17-18,20,28-29

இரண்டாம் வாசகம்
எபி 12:18-19,22-24

நற்செய்தி
லூக் 14:1,7-14

பொதுக்காலம்
22-ம் ஞாயிறு

ஆகஸ்ட் 2022

**28**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### தெலசாலின் பொன்மொழி

புனித அகுஸ்தினார் : எவ்வளவு முறை கடவுள் உங்களை தன்னிடம் கொண்டுவர அழைத்திருக்கிறார். ஆனால் நீங்கள் அதை உணர்ந்து கொள்ளவில்லையோ? (MSF)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

இறையரசைக் கட்டியெழுப்புவதும், இறையாட்சியின் விழுமியங்களை மண்ணில் விதைப்பதும் எளிதான காரியமல்ல...மாறாக இவற்றை நிலைநாட்டப் பாடுகள் பல படவேண்டும். சோதனைகளை சாதனைகளாக மாற்றும் விவேகம் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான இறையாட்சி உருவாக நாம் கருவிகளாக மாற முடியும் என்பதை இன்றைய விவிலிய வாசகங்கள் எடுத்துரைக்கின்றன.

நாம் மாற்றங்களை விதைக்கும் போதும், சீரற்ற பாதையை செம்மைப்படுத்தும் போதும் இன்னல்களும், இடர்பாடுகளும் எளிதாய் வந்து சேரும். இவைகளை நாம் தூய ஆவியின் துணை கொண்டே வென்றெடுக்க முடியும். கடவுளை மாட்சிப்படுத்தும் இந்த இடர்பாடுள்ள பயணம், எதிர்ப்புகளையும், ஏமாற்றங்களையும் பெற்றுத் தரும். சூட்சமம் நிறைந்த இவ்வுலகில் இறையரசைக் கட்டி எழுப்பும் இந்த இமாலயப் பணியை தூய ஆவியின் துணை கொண்டே நாம் நிறைவேற்ற முடியும்.

தூய ஆவியின் அருட்கொடைகளை நாம் நிரம்பப் பெற்று, அகிலத்தை மாற்றும் அன்புப் பணியை நாம் மேற்கொள்ள தடையாய் இருக்கும் காரணிகளை தகர்த்தெறிவோம். புதிய உலகு படைப்போம். புரட்சி தீபம் ஏற்றுவோம்!

**சிந்தனைக்கு :**

இறையாட்சிப் பணியில் இறைவனின் பாதையில் பயணிக்கும் போது அது பாடுகளின் பாதையாய் மாறும். அப் பாதையை செம்மைப்படுத்தி, சீராக்க கோதுமை மணியாய் மண்ணில் மடிய வேண்டி இருக்கும். அப்பொழுதுதான் நூறுமடங்கு பலன் தருபவர்களாக நாம் மாற முடியும், ஆம் "இலட்சியவாதிகள் புதைக்கப்படுவதில்லை மாறாக விதைக்கப்படுகிறார்கள்".

முதல் வாசகம்
எரேமியா 1:17-19

பதிலுரைப்பாடல்
திபா. 119:97-98,99-100,101-102

நற்செய்தி
மாற்கு 6:17-29


புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள்

ஆகஸ்ட் 2022
**29**
திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

### தெலசாலின் பொன்மொழி

புனித திருமுழுக்கு யோவானின் தலைவெட்டபடுதல் : புனித திருமுழுக்கு யோவானை போன்று நீங்களும் இயேசுவுக்காக உங்களின் மாணவர்கள் இதயத்தில் பாதை ஏற்படுத்த கடமைபட்டுள்ளீர்கள். (MSF)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 கொரி 2:10-16

பதிலுரைப்பாடல்
திபா. 145:8-9,10-11,12-13,14

நற்செய்தி
மத்தேயு 4:31-37

புனித யூப்ராசியா

ஆகஸ்ட் 2022

**30**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

மனிதன் தான் இவ்வுலகில் பெற்ற அறிவினாலும், கற்ற பாடங்களாலும் இறைவனின் மாட்சியை ஒருபோதும் கண்டுணர்ந்து கொள்ள முடியாது. மாறாக இறைவனைப் புரிந்துகொள்ள இறையாட்சியின் வல்லமையை அறிந்து கொள்ள தூய ஆவிக்குரிய ஞானத்தை நாம் பெற்றிருக்க வேண்டும். அந்த ஆவியே மனிதனின் மனத்தை புடமிட்டு, இறைத் திட்டத்தை அறிந்து கொள்ளும் ஆற்றலை பெற்றுத் தரும். என்பதை வலியுறுத்துகிறது இன்றைய நற்செய்தி வாசகங்கள்.

இறை ஞானம் என்பது அன்பை அடிப்படையாகக் கொண்டது. சுயநலம் காணாது, பொதுநலம் காணும் பேராற்றலை கொண்டது.

நாம் கிறிஸ்து போல மாற முயல்வதை விட கிறிஸ்துவாகவே வாழ முயற்சி மேற்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மனங்களாக நமது எண்ணங்கள், செயல்பாடுகள் பிரதிபலிக்க வேண்டும். அப்பொழுதுதான் தூய ஆவிக்குரிய கொடைகளை பெற்றவர்களாக இம்மண்ணில் வலம் வர முடியும்.

**சிந்தனைக்கு :**

மனித வாழ்வின் இறைவாழ்வுப் பயணத்தில் சிலுவைகளே இல்லையென்றால் அங்கு உயிர்த்தெழுதல் என்ற மாபெரும் நிகழ்வு நடைபெறாமல் போய்விடும். நாம் நம்மையே மறுத்து, நமக்குரிய சிலுவைகளை நாள்தோறும் சுமந்துகொண்டால் மட்டுமே இயேசுவை முழுமையாக பின்பற்ற முடியும். இறைவனின் நிலைவாழ்வுப் பயணத்தில் பங்கேற்க நான் தயாரா?

### தெலசாலின் பொன்மொழி

உங்கள் மாணவர்களை தீமையிலிருந்து வெளிகொண்டுவர ஒரு தந்தையின் கண்டிப்பை நீங்கள் கொண்டிருந்தால், அவர்களை ஒற்றுமையாக ஒருங்கிணைக்க ஒரு தாயின் இரக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும். இவற்றை உங்களின் நன்மை தனத்தால் செய்யவேண்டும். (MSF)



COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
1 கொரி 3:1-9

பதிலுரைப்பாடல்
திபா. 33:12-13,14-15,20-21

நற்செய்தி
லூக்கா 4:38-44

புனித ரெய்மண்ட் நொன்னாடஸ்

ஆகஸ்ட் 2022
**31**
புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **கென்னடி** FSC

கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் இறைத்தன்மையை வாழ்வின் எத்தகைய சூழலிலும் வெளிக்காட்ட வேண்டும் என்பதை மையப்படுத்தி இன்றைய இறை வாசகங்கள் கிறிஸ்தவ வாழ்வின் நெறிமுறைகளை பிரதிபலிக்கின்றன. நமது ஊனியல்பை மையப்படுத்தி, உலக காரியங்களில் நாட்டம் கொண்டு வாழும் வாழ்வில் கடவுளின் காட்சி வெளிப்படுவதில்லை.

இறைவனை முழுமையாக மையப்படுத்தி வாழும் இறைவாழ்வு முழுமைபெற்றதாக மாறுகின்றது. நீர் பாய்ச்சுபவரும் அவரே! நிலத்தை விளைவிப்பவரும் அவரே! என்ற பேருண்மையை ஒவ்வொரு கிறிஸ்தவ பணியாளனும் அறிந்திருக்க வேண்டும். இறைவனின் ஆட்சியில் நாம் அனைவரும் உடன் உழைப்பாளர்கள். அவரது மீட்புத் திட்டத்தில் பங்கேற்கும் பயன்படுத்தப்பட்ட கருவிகள்! அக்கருவிகளாகிய நாம் சிந்தனையிலும் செயல்பாட்டிலும் இயேசுவைப் பிரதிபலிப்பவர்களாக மாறவேண்டும்.

கிறிஸ்தவ வாழ்வில் இறைத்தன்மை என்பது ஒவ்வொரு கணமும் ஒளிர வேண்டும்! இயேசுவின் உயிரோட்டம் ஒவ்வொரு நாளும் மிளிர வேண்டும்!

**சிந்தனைக்கு :**

துன்பம் இல்லாமல் வாழ வேண்டும் என்று கடவுளைப் பிராத்திப்பதை விட, துன்பம் கொடுத்தாலும் அதனைத் தாங்கும் சக்தியையும், சமாளிக்க கூடிய திறனையும் கொடு என்று வேண்டுவதே சிறந்தது. "சிலுவையினால் தான் மீட்புண்டு".



### தெலசாலின் பொன்மொழி

கடவுளை போல நமது ஆன்மவாழ்க்கை இருக்கவேண்டும். கடவுளின் பிரசன்னத்தை உங்களால் முடிந்த அளவு நினைவு கூர்வதன்மூலம் உங்கள் ஆன்ம வாழ்வை வளருங்கள். (MSF)


# அன்றாட இறை உணவு - ஆகஸ்ட் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1<br>எரே 28:1-17<br>திபா 119:29,43,79,80,95,102<br>மத் 14: 13-21 | 2<br>எரே 30 : 1-2, 12-15, 18-22<br>திபா 102 : 15-20, 28, 21-22<br>மத் 14: 22-35 | 3<br>எரே 31 :1-7<br>எரே 31:10, 11-13<br>மத் 15:21-28 | 4<br>எசே 3 : 16-21<br>திபா 117 : 1-2<br>மத் 9 : 35-10:1 | 5<br>திவெ 21: 1-5அ<br>யூதி 13:18-20அ<br>லூக் 11:27-28 | 6<br>தானி 7:9-10, 13-14<br>திபா 97:1-2,5-6,9<br>2 பேது 1:16-19<br>லூக் 9:28ஆ - 36 |
| 7<br>சாஞா 18:6-9<br>திபா 33:1,12,18-20,22<br>எபி 11:1-2, 8-19<br>லூக் 12 : 32-48 | 8<br>எசே 1:2-5, 24-28<br>திபா 148:1-2,11-14<br>மத் 17:22-27 | 9<br>எசே 2:8-3:4<br>திபா 119 : 14,24,72,103,111,131<br>மத் 18: 1-5, 10-14 | 10<br>2 கொரி 9:6-10<br>திபா 112:1-2,5-9<br>யோவா 12:24-26 | 11<br>எசே 12:1-12<br>திபா 78:56-59,61-62<br>மத் 18:21-19:1 | 12<br>எசே 16:1-15,60,63<br>எசா 12:2-4ஆஇஈ, 5-6<br>மத் 19:3-12 | 13<br>எசே 18:1-10,13ஆ, 30-32<br>திபா 51:10-13,16-17<br>மத் 1-:13-15 |
| 14<br>எரே 38:4-6,8-10<br>திபா 40:1,2,3,17<br>எபி 12:1-4<br>லூக் 12 : 49-53 | 15<br>திவெ 11:19அ, 12: 1-6 10 அஆ<br>திபா 45:9-11,15<br>1 கொரி 15:20-26<br>லூக் 1 : 39 -56 | 16<br>எசே 28:1-10<br>இச 32:26-28,30,35இஈ- 36அஆ<br>மத் 19:23-30 | 17<br>எசே 34:1-11<br>திபா 23:1-6<br>மத் 20:1-16 | 18<br>எசே 36:23-38<br>திபா 51: 10-13,16-17<br>மத் 22:1-14 | 19<br>எசே 37:1-14<br>திபா 107:2-9<br>மத் 22:1-14 | 20<br>எசே 43:1-7அ<br>திபா 85 : 8அஆ-13<br>மத் 23:34-40 |
| 21<br>எசா 66:18-21<br>திபா 117:12<br>எபி 12:5-7,11-13<br>லூக் 13:22-30 | 22<br>எசா 9:2-4,6-7<br>திபா 113: 1-8<br>லூக் 1:26-38 | 23<br>2 தெச 2 : 1-3அ, 14-17<br>திபா 96 : 10-13<br>மத் 23:23-26 | 24<br>திவெ 21:9ஆ - 14<br>திபா 145:10-13அஆ, 17,18<br>யோவா 1:45-51 | 25<br>1 கொரி 1:1-9<br>திபா 145:2-7<br>மத் 24:42-51 | 26<br>1 கொரி 1:17-25<br>திபா 33 : 1-2,4-5,10-11<br>மத் 25:1-13 | 27<br>1 கொரி 1:26-31<br>திபா 33:12-13, 18-21<br>மத் 5ஷ25: 14-30 |
| 28<br>சீரா 3:17-18,20,28-29<br>திபா 68: 3-4அஇ, 5-6 அஆ<br>எபி 12:18-19, 22-24அ<br>லூக் 14:1,7-14 | 29<br>எரே 1:17-19<br>திபா 71:1-6, 15அஆ, 17<br>மாற் 6:17-29 | 30<br>1 கொரி 2:10ஆ - 16<br>திபா 145:8-14<br>லூக் 4 : 31-37 | 31<br>1 கொரி 3:1-9<br>திபா 33:12-15,20-21<br>லூக் 4: 38-44 | | | |

# லசாலிய இறை அழைத்தல் கல்வி பணிக்கு அர்ப்பணிக்க தயாரா?



வாருங்கள், லசாலிய குடும்பத்தோடு வாழ்வதற்கு



## இம்மாத லசாலிய புனிதரின் திருவிழா

**புனித பெனில்டஸ்** (1805–1862)

**திருவிழா : ஆகஸ்ட் 13**

### ஜெபம்

எல்லாம் வல்ல இறைவா,
புனித பெனில்டஸின் நல் வாழ்வு
எமது அகத்தினைத் தூண்டச் செய்கிறது.
அவரது முன் மாதிரிகையினை
நாங்கள் கண்ணோக்குகிறோம்.
அவரது விண்ணகப் பரிந்துரையின் வழியாக
உமது திருப்பிரசன்னத்தினை நாங்கள் உணர்ந்து
வாழவும், உமது அன்பினை அக்களிப்போடு
அனுதினமும் வாழவும் எமக்கு அருள் புரியும்.

சாமானியர்களின் எளிய வாழ்வினை
மாற்றம் பெற எம்மைத் தூண்டும்.
எம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள
ஏழைச் சிறார்களிடமுள்ள மிகச் சிறப்பான
வற்றை வெளி கொண்டுவர எமக்குத்
துணைபுரியும் இதனை
எம் மீட்பராம் இயேசுவின் வழியாக
உம்மை மன்றாடுகிறோம். – ஆமென்.

வெளியீடு
தகவல் தொடர்பு குழு
தெலசால் சபை, இந்திய மறைப்பணித்தளம்.
இளைஞர் நகர் புல்லூத்து, நாகமலை, மதுரை – 625019

அடுத்த இதழில் செப்டம்பர் மாதச் சிந்தனையைத் தொகுத்து வழங்குபவர் : அருட்சகோ. ஆரோக்கியதாஸ் FSC, தூத்துக்குடி

www.lasalleindia.org